**மார்ச் – 31**

**"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்." - 1தீமோ 6 : 12.**

நம்முடைய போராட்டம் அதிகப் பகிரங்கமானதோ, அல்லது அதிக அந்தரங்க வகையோ, போராட்டம் இருந்தே ஆக வேண்டும். மேலும் இதற்கு அதிகமாக, முன்னேற்றமும் வெற்றியும் இருக்க வேண்டும். அல்லாவிட்டால், நாம் ஒருபொழுதும் "ஜெயங்கொள்ளிகிறவர்களாக" ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதவர்களாவோம். நாம் எல்லோரும் மற்றொரு கருத்தையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். கர்த்தர் தமது மதிப்பிடுதலில் நமது முயற்சிகளினாலே அடைந்த பலன்களை விட, அதிகமாக நம்மை ஏவின ஆவியைக் கவனிக்கிறார். இப்படி இருப்பதால், நமது கரங்களுக்கு எட்டின வாய்ப்புகளை நமது பலத்துடன் செய்வது மாத்திரமல்லாமல், அவருக்காகவும், வீண் புகழ்ச்சியிலிருந்து அல்ல என்றும், கர்த்தர் எண்ணி அதை அங்கீகரிக்கத்தக்கதாக, கர்த்தருக்கும் அவர் காரணமாகவும் செலுத்துகிற நமது ஒவ்வொரு பலியும் செய்யும் தியாகமும் அவ்வளவு அன்பும் பக்தியும் உள்ளதாய் இருக்க ஞாபகத்தில் வைப்போமாக.

**-Z ’03, 91 (R 3166).**

கர்த்தருடைய ஜனங்கள் தேவனுடைய பக்கம் நின்று நீதிக்காக சண்டையிட்டுக் கொண்டிருக்க அழைக்கப்படுகிறார்கள். தேவனுடைய அழைப்பின் பந்தயப் பொருளுக்காகவுள்ள திடமான அன்பு விசுவாசத்தின் நல்ல போராட்டத்தில் ஊக்குவிக்கும் நம்பிக்கையையும், தைரியத்தையும் கொடுக்கப் பயன் தரத்தக்க உதவியாக இருக்கும். மேலும் இந்தப் போராட்டத்தில் பகிரங்கமாகத் தங்கள் ஸ்தானத்தைத் தேவனுடைய பக்கத்தில் எடுத்து விரோதிகளிடமிருந்து இழிவாக ஓடிப்போகிறதற்கும் அல்லது விரோதியிடம் சரணடைவதற்கும் காரணமாயிருக்கும் கோழைத்தனத்தால், அவர்கள் தேவனுக்கு அவமானத்தைக் கொண்டு வராதிருப்பார்களாக. **-P ’32, 30.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1தீமோ 1:18; எபே 6:12; 2தீமோ 2:5; 4:7; பிலி 3:12-14; 1தீமோ 6:19; மத் 7:21-23; 10:32,33; யோவா 9:22-28; ரோம 2:7; 10:9,10; 1யோவா 4:15.

**கோபுர வாசிப்பு : Z ’98, 153 (R 2309).**

**வினாக்கள் :** என்னுடைய விசுவாச அறிக்கையின்படி நித்திய ஜீவனை அடையும்படி நான் போராடினேனா? ஏன்? எப்படி? ஏற்பட்ட பலன் என்ன?